**ARTICLE 30 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00092**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 21–25
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

# பூமணி சிறுகதைகளில் சமுதாயம்

**முனைவர். மைக்கேல் சைனி பி**[1,*]
[1]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை, India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். மைக்கேல் சைனி பி — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

கரிசல் இலக்கிய படைப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர் பூமணி ஆவார். அவரது படைப்புகளில் எதார்த்த வாழ்வியல் மையம் கொண்டுள்ளன. பசி, தாகம், வறுமை, தண்ணீர்த் தட்டுப்பாடு, விவசாயத்தின் நிலையற்ற தன்மை ஆகியவை இந்த சமூக அவலத்தின் பல்வேறு முகங்களாக அமைகின்றன. இவை மிகைப்படுத்தப்பட்ட பரிதாபக் காட்சிகளாக அல்லாமல், அன்றாட வாழ்க்கையின் இயல்பான நிகழ்வுகளாகக் கதைகளில் இடம்பெறுகின்றன. இதனால் பூமணியின் சிறுகதைகள் கரிசல் மக்களின் துன்பத்தைப் பதிவு செய்வதோடு, அவர்களின் உழைப்பு, மன உறுதி, மண்ணுடனான உறவு ஆகியவற்றையும் வெளிப்படுத்துகின்றன. கரிசல் நில மக்களின் வாழ்வியலை சிறுகதைகளில் பூமணி பதிவு செய்யும் பாங்கினை எடுத்துரைப்பதாக கட்டுரை அமைகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** திறவுச்சொற்கள்: கரிசல் சமுதாயம் - உணவுப் பண்பாடு - விவசாயம் - வறுமை -வாழ்வியல் - குருதி - உழைப்பு - யதார்த்தம் - கதைக்களம் - மண் - உழவன் - பசி - தாகம் - சுமை - உறவு - தெய்வ வழிபாடு

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** பி, மு. மை. சை. (2026). பூமணி சிறுகதைகளில் சமுதாயம். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

ஒவ்வொரு படைப்பாளியின் கதைகளையும் ரசனையின் அடிப்படையில் சில படிமங்களாகவேத் தொகுக்கலாம். கரிசல் மண்ணில் ஆழக் கோடிழுக்கும் எழுத்துக் கூர்மை பூமணியின் சிறுகதைகளின் காணக் கிடைக்கின்றன. எழுத்தில் நீரின் தன்மையையும், தீயின் வெம்மையையும் அவரது எழுத்துக்கள் மூலம் உணரலாம்.

'பூமணியின் கதைகளை உறைந்து கறுத்த ரத்தத் துளிகளாகவே உணர முடிகிறது. இவரது எல்லாக் கதைகளிலும் இருப்பது தீவிரமான மானுட அவலம். ஆனால் அடிப்பட்ட காயத்திலிருந்து வழியும் குருதியாக அவை இல்லை, என்றோ எப்போதோ பட்ட அடியில் இருந்து சொட்டி உலாந்து கருகி கரிப்பொட்டாக ஆகி எஞ்சியிருக்கும் குருதி தொட்டு முகர்ந்தால் மட்டுமே அது குருதி என்று தெரிகிறது. எனும் வரிகள் பூமணியின் சிறுகததகள் பயணிக்கும் கதைக் கனத்தை, கரிசல் வெளியைக் கண்முன் காட்டுகின்றது. இவ்வாறு பூமணியின் கண்மணி வழிக் காணும் சிவந்த மண்ணில் எழுதப்பட்ட, மக்களின் வாழ்வியல் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

## சமுதாயம்

'சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திக் கொண்ட ஒரு கட்டமைப்பாகும். ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும். இது மக்கள் ஒன்றுகூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஓரிடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கும் என்று வாழ்வியல் களஞ்சியம் கூறுகிறது.' (வாழ்வியற் களஞ்சியம் தொகுதி.5', ப.469). சமுதாயம் சமூக வாழ்க்கையின் அனைத்து நிலைகளையும் கொண்டிருக்கின்ற சிறிய நிலப்பகுதியிலுள்ள குழுவைக் குறிப்பதாகும்.

## பூமணியின் சிறுகதைகளில் காணப்படும் இலக்கியச் சுவை

'இலக்கியச் சுவை' என்ற சொல்லாட்சி குறித்து இலக்கியத் திறனாய்விற்கு கோட்பாட்டாளர்கள் 'ஒரு புறவயமான குறியீட்டு அமைப்பினை முகாந்தரமாகக் கொண்டு மனதில் கற்பனை மூலம் நிகழ்த்தப்படும் அனுபவம்' (ஜெயமோகன் 'பூக்கும் கருவேலம்', ப.49) என்று 'இலக்கியச் சுவை பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

கண், காது, மொழிப்புலன் ஆகியவை தொட்டு உணரும் உணர்ச்சிகள் வேறு. 'படைத்தல்' அனுபவம் என்பது வேறு.

பூமணி அவர்களின் சிறுகதைகளில் காணக்கிடைக்கும் 'இலக்கியச் சுவை' யானது, ஒருவரை 'ஆர்வமூட்டும் அத்த மனத்தாவல்' போல் இருக்கும். ஒரு 'சாக்லேட்' என்பது ஒரு குறியீட்டுப் பொருள். ஒரு கவிதைப் படிமம் போல நாக்கை ஊடகமாகக் கொண்டு மனதில் விரிந்த அனுபவத்தை உருவாக்குகின்றது சாக்லெட். படிமமும் மொழிப்புலத்தை ஊடகமாகக் கொண்டு அதையே நிகழ்த்துகிறது. ஆகவே சுவையனுபவம் என்பது பொதுவானதுதான். பூமணியின் கதைகளில் 'பழக்கம்' மற்றும் 'புதுமை நாட்டம்' ஆகியவற்றாலான முரணியக்கத்தைக் காணலாம்.

## பூமணியின் கதைக்களம்

சென்னை வாழ்வினைப் பற்றிக் கூறும்போது, 'சென்னை நகரில் கவிதை எழுதுவது என்பது நடக்காத காரியம். வேண்டுமானால் செய்யுள் எழுதலாம். இதை ஒரு போர்டில் எழுதி எழும்பூர் ரயில் நிலையத்திலும் சென்டிரல் ரயில் நிலையத்திலும் தொங்கவிட்டால் இங்கே குடியேறுவதற்காக வரும் உண்மைக் கவிஞர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக, இருக்கும்' என்று கு. அழகிரிசாமி குறிப்பிடுகிறார்.

முக்கால்வாசி பேர்கள் இந்தத் தலைமுறையிலும் போன தலைமுறையிலும் கிராமங்களிலிருந்து எழுதத் தொடங்கி பிறகு நகரங்களை நோக்கி நகர்ந்தார்கள். வாழ்வு முறைக்கான மையம் நகரமாக இருந்தாலும் கதை மையமாக கிராமிய வாழ்க்கை முறையை, வேளாண் எழுத்தாளர்கள் சிலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுள் ஒருவராக பூமணி காணப்படுகிறார்.

'நகரம் அவருக்குள் பதிவாகவில்லை அவருக்குள் கிராமத்தான் இன்னும் சப்பணமிட்டு அட்டணைக்கால் போட்டு உட்கார்ந்திருக்கிறான். எந்த இடத்தில் முனைத்து வந்ததாரோ அந்த வட்டாரமும், எந்த காலத்தில்

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

அவர் உதயமாகிப் பதியமானாரோ அந்த வரலாறும் தான் பூமணியின் படைப்புக்களாக வருகின்றன' (பூமணி, 'பூமணி கதைகள்', ப.1).

'சென்னை மாநகருக்கு வந்து உயிர்ப்பற்ற பொட்டல் வெளியில் தன்னந்தனியாய் முளைத்து வெக்கைக் காற்றுக்கு ஆடும் புல் போல் வெருள வெருளத்தான் பார்க்கிறார்.

'கால்ல ஒட்டுன கரிசக்காட்டு மண்ணா
சீலைல ஒட்டுன செவக்காட்டு மண்ணா' (மேலது, ப.9)

என்று உதறிவிட முடியாமல் பிறந்த மண்ணோடு அதன் உறவுகளோடு நீ உண்டு. நான் உண்டு என்று தான் ஒட்டிக்கொண்டு நிற்கிறார்.'

## உணவு முறைகள்

மக்கள் தங்கள் பசியைப் போக்கிக் கொள்வதற்காக, உணவு உண்கின்றனர். அவ்வுணவுப் பழக்கமானது, மக்கள் வாழும் நிலம், அந்நிலத்தில் விளையும் பயிர் தட்ப வெப்பநிலை போன்றவற்றுக்கேற்ப அமைகின்றது. வானம் பார்த்த பூமியான கரிசல் நிலத்தில் வாழும் மக்கள் கம்பு, குதினரவாலி, சோளம், சானம், வரகு, கேழ்வரகு போன்ற சிறுதானிய வகைகளை முக்கிய உணவாக உட்கொள்கின்றனர். காணப்பயிறு, தட்டைபயிறு, பாசிப்பயிறு போன்ற தங்கள் நிலத்தில் விளையும் பயறு வகைகளையும் துணை உணவாகக் கொள்கின்றனர். கரிசல்காரர்களின் முக்கிய உணவு கஞ்சியும், களியும், கூழும் ஆகும். கரிசல் மக்களுக்கு நெல்லுச்சோறு என்பது ஓர் ஆடம்பரமாகக் கருதப்பட்டது. நெல்லும் சோற்றினைக் கல்யாணம், சடங்கு போன்ற விழா நாட்களிலும் பண்டிகை நாட்களிலும் உட்கொண்டனர்.

'மிக எளிய உணவுகளின் சுவைகளாலானதாகப் பூமணியின் புனைவுலகம் விரிந்து கொண்டே இருக்கிறது. கம்பங்கூழ் மீது படரும் ஆடை, கலத்தில் இருந்து கையால் அள்ளி வைக்கும் புளித்த கஞ்சியின் வாடை, பலவகையான சிறு பறவைகள், அணில்கள், கறிச்சுவைகள், 'சக்கணன் கோவைக் கொடியிலிருந்து இலைகளை ஆய்ந்து கொண்டிருந்தான். கல்லை வாங்கி அவக்கென்று இழுத்தரைத்து இலை நசுக்கலை விரலால் வழித்தான் கருப்பன். . . அதைப்புழிஞ்சு உப்புல ஒரு செரங்க குடிச்சா தாவல' என வரும் மருத்துவச்சகவைகள்' எனத் தகவல்கள் அவர் சிறுகதைகளில் கொட்டிக் கிடக்கின்றன.

உணவுக்கு இடையில் வறுமையும் ஊடாடுவதைக் காணலாம்

'இன்னைக்குக்கூட மதியக்கஞ்சி குடிக்கல. குடிக்கணும்னு பானையைத் தொறந்து பாத்தென். தண்ணிதான் கெடந்துச்சு. சின்னம்மாளக் காணும். அழுக வந்துருச்சு. அடக்கீட்டு பேசாம இருந்துக் கிட்டென்.' (மேலது, ப. 22)

'இயற்கை என்ற புகழ்பெற்ற பேருரையில் எமர்சன் நிலமே மொழியாகிறது' என்கிறார். பூமணியின் கரிசலே அவரது மொழியாக இலக்கியமாக ஆகியிருக்கிறது. அவரது படைப்புகளின் எல்லாச் சுவைகளும் அந்நிலத்தின் சுவைகளே ஆகும்.

## விவசாயம்

கரிசல் காட்சிவெளியாக அவரது சிறுகதைகளில் காட்டப்பட்டிருக்கும். 'பொழுதடைய இன்னும் கொஞ்சம் நேரந்தான் இருந்தது. எலுமிச்சம்

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

பழத்தை மெல்ல மெல்ல விழுங்கிய மாதிரி மலமுகடுகளுக்கிடையில் பொழுது நழுவிக் கொண்டிருந்தது' எனக் கரிசலில் அந்திப்பொன்னிறம் கொள்வதைக் கூடச் சர்வ சாதாரணமான அழகியலும் சொல்லிச் செல்கிறது பூமணியின் பார்வை. 'தண்ணீர் வாய்க்கால் வழியாகக் கிழக்காமல் அலுப்புத் தீர ஓடி தெற்கே அடர்ந்து வளர்ந்த மிளகாய்ச் செடித் தோட்டத்துக்குள் நுழைந்தது. பூவும் பிஞ்சுமாகப் பூரித்து நிற்கும் செடிகளுடே தண்ணீர் ஒடுவதைப் பார்த்தால் ஒரு கானகத்துக்குள் ஆறு ஒடுவதைப் போல பிரமை' எனக் குழந்தைத் தனமான விவரணை சட்டென்று 'காய்ந்து சிறு விருவோடிய நிலத்தில் நீர் நனைக்கவும் ஆவி விட்டு நீர்த்து பொருமிப் பூரிக்கும் கண்ணிலிருந்து குளுமையான மணம் கிளம்பியது' என நுண்ணிய அனுபவப் பதிவாகவும் ஆகிறது. விவசாயத் தொழிலை மேற்கொள்பவர்கள், உழவன், உழத்தி என்ப பண்டையத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் தம் உழைப்பை நிலத்தின்பால் செலவிட்டு நிலத்தை விளைநிலமாக மாற்றிய பெருமைக்குரியவர்கள். வளர்ந்து வரும் நவீன மாற்றங்கள் விவசாயத் தொழிலுக்குப் பலவகையான இடப்பாடுகளையும் கொடுத்த வண்ணம் உள்ளன.

விவசாயத் தொழிலானது மண்ணையும் விண்ணையும் நம்பியதொரு தொழில், இடைவிடாது பயனை அளிக்கவும் மண் தன்னுடைய வளமையை இழந்துவிடும் என்பது வேளாண் விஞ்ஞானிகளின் கருத்து. விவசாயம் நடைபெறத் தண்ணீர் மிகவும் தேவை ஆனால் தண்ணீர் கிடைப்பதில் இயற்கையின் பங்கு சீரானதாக இல்லை.

'எங்க அண்ணன் பெரியாளாயிட்டான். அண்ணா அவுக வீட்ல சம்பளத்துக்கு இருக்கான். ஒரு நானைக்குத் தண்ணி பாய்ச்சுவான். ஒரு நாளைக்குக் கமல எறப்பான்' எனும் ஆசிரியரின் கூற்று விவசாயிகளின் உற்பத்தியினை உணர்த்துகிறது.

மண்ணைக் கிண்டி மண்ணில் வாழ்ந்து மறையும் பெரிய மண்ணாடி மண்ணின் ஒரு பகுதியாகவே தோன்றும் அந்த மகத்தான பிரமையே சிறுகதைகளை இலக்கியமாக ஆக்குகிறது. அதன்பின் மண்ணின் சுவையை ஒவ்வொரு வரியிலும் தேக்கிக் காட்டியிருக்கிறது.

பிறநுண்கலைகளிலிருந்து, இலக்கியத்தைப் பிரிப்பது இந்த அம்சம் தான். இலக்கியத்தின் 'எலும்புக் கட்டமைப்பு' ஆக வாழ்வியல் கூறுகள் இருக்கின்றன. பெரும்பாலும் இலக்கியப் படைப்புகளின் வடிவத்தைத் தீர்மானிப்பதும் இதுவே. 'இலக்கியப் படைப்பில் மிகவும் பருண்மையான கூறும் இதுவேயாகும். சமூகத்திற்கும், படைப்புகலைக்கும் உள்ள உறவு, பிரிக்க முடியாததும் புறக்கணிக்க இயலாததுமாகும். படைப்பாளியின் படைப்பு அவரைச் சமூகத்திலுள்ள மக்களுடன் இணைக்கிற சங்கிலியாகவும், பாலமாகவும் அமைகிறது. சமூகத்தின் மீதான கருத்துக்கள், கணிப்புகள் குறிக்கோள்கள், வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகள் அளவுகோல்கள் போன்றவை கலைப் படைப்பு உருவாகக் காரணமாக அமைகின்றன.

## தொகுப்புரை

பூமணியின் கரிசலே அவரது மொழியாக இலக்கியமாக ஆகியிருக்கிறது. அவரது படைப்புலகின் எல்லாச் சுவைகளும் அந்நிலத்தின் சுவைகளே ஆகும். விவசயாத் தொழிலானது மண்ணையும்

விண்ணையும் நம்பியதொரு தொழில், இடைவிடாது பயனை அளிக்கும் மண் தன்னுடைய வளமையை இமந்துவிடும் என்பது வேளாண் விஞ்ஞானிகளின் கருத்து. விவசாயம் நடைபெறத் தண்ணீர் மிகவும் தேவை ஆனால் தண்ணீர் கிடைப்பதில் இயற்கையின் பங்கு சீரானதாக இல்லை. மண்ணைக் கிண்டி மண்ணில் வாழ்ந்து மறையும் பெயிய மண்ணாடி மண்ணின் ஒரு பகுதியாகவே தோன்றும் அந்த மகத்தான பிரமையே சிறுகதைகளை இலக்கியமாக ஆக்குகிறது. அதன்பின் மண்ணின் சுவையை ஒவ்வொரு வரியிலும் தேக்கிக் காட்டியிருக்கிறது. கரிசல் தமிழ் இலக்கியத்தில் அழியாத இடம் பெற்றது முன்வேலிக்குள்; சிக்கிக்கொண்ட கிழிந்த துணியெனப் படபடத்தபடியே ஆகாசத்தில் ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கும் சூரியனும், ஆட்டு உரல்களில் கூட நிரம்பி வழியும் வெயிலும், குடிநீருக்காக அலைந்து திரியும் பெண்களும், தாகமும், பசியும் அடங்காத காட்டு தெய்வங்களும் கொண்டதுதான் கரிசல் வெளி. வாழ்நாளெல்லாம் உழைத்தவர்கள் உணவே கடவுளாகத் தவமிருக்கும் அந்தக் காட்சி அளிக்கும் ஆழமான வலி நிறைந்த வாழ்வுத் தழும்புகள் பூமணியின் பல சிறுகதைகளைக் கனம் மிக்கவை ஆக்குகின்றன என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. வாழ்வியல் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
2. பூமணி சிறுகதைகள், காலச்சுவடு பதிப்பகம்

© 2026 முனைவர். மைக்கேல் சைனி பி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..